செ. கு. எண் : 048 நாள் : 11.02.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 11.2.2016

திருவண்ணாமலை மாவட்டம், **சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து,** பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து சாத்தனூர் இடது மற்றும் வலது புறக் கால்வாய் வாயிலாக பாசனம் பெறும் பகுதிகளுக்கும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கும் **12.2.2016 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள **50,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9